ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2424/52 - 2025 පෙබරවාරි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.02.20

*2424/52 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்***

*2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியின் கீழான கட்டளை*

2012 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 1758/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி ஹெடிகலகே சம்பத் சஜீவ துய்யகொன்தா ஆகிய நான், சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்படி செயற்பட்டு, இக்கட்டளையின் மூலம் மேலேயுள்ள ஒழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி 20 ஆந் திகதிய 2424/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பட்டியலுக்கான திருத்தத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்ட, 2014 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆந் திகதிய 1854/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட மற்றும் பட்டியலிடப்பட்ட எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு குழுவினருக்கு அல்லது உருவகத்துக்குரிய அல்லது சொந்தமான அல்லது வைத்திருக்கப்பட்ட எல்லா நிதிகளையும், ஏனைய நிதிசாரா சொத்துக்களையும், பொருளாதார மூலவளங்களையும் முடக்குகின்றேன்.

2014 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதிய 1863/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 5 இன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையானது, அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் மீளப் பெறப்படுகின்றது.

ஏயார் வைஸ் மார்ஷல்
**சம்பத் துய்யகொன்தா** (ஓய்வுபெற்ற)
டபிள்யூடபிள்யூவீ, ஆர்டபிள்யூபீ (மூன்றுமுறை),
ஆர்எஸ்பீ (இரண்டுமுறை), யூஎஸ்பீ, எம்எம்எஸ்சீ
(மூலோபாய ஆய்வுகள் - சீனா), எம்எஸ்சீ (பாதுகாப்பு ஆய்வுகள்),
முகாமைத்துவம், எம்எஸ்சீ (பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஆய்வுகள்),
எப்என்டீயூ (சீனா), பீஎஸ்சீ.
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு,
தகுதிவாய்ந்த அதிகாரி.

கொழும்பு,
*2025, பெப்புருவரி 20.*

1A - G 43787— 24 (2025/02)
இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.